ஆம்னி பேருந்துகளில் 8 மடங்கு பகல் கொள்ளை!

கட்டண உயர்வுக்கு – துணை போகிறதா த.வெ.க. அரசு?

சென்னை, அக். 22 -

விடுமுறையை முன்னிட்டு சென்னையில் இருந்து வெளியூர்களுக்குச் செல்லும் ஆம்னி பேருந்துகளின் கட்டணம் வழக்கத்தை விட 6 முதல் 8 மடங்கு வரை கொடூரமாக உயர்த்தப்பட்டுள்ளது. அரசுப் பேருந்து கட்டணத்தோடு ஒப்பிட்டால் இது 12 முதல் 14 மடங்கு அதிகமாகும்!

போக்குவரத்து துறை அமைச்சர் அவர்களே இன்னும் சாப்பிட்டு முடிக்கவில்லையா? எப்போது தான் இதை சரி செய்யப் போகிறீர்கள்?

கமிஷன் டீலிங்!

ஆம்னி பேருந்துகாரர்கள் இப்படிப் பகல் கொள்ளை அடிப்பதைத் தடுக்க நேரில் வந்து ஆய்வு செய்வீர்களா? இல்லை, இன்னும் ஆம்னி பேருந்து முதலாளி களிடமும், நெடுஞ்சாலை உணவகங்களிடமும் 'கமிஷன்' வாங்கும் பிஸியிலேயே இருக்கிறீர்களா?

பண்டிகை நெருங்கும் முன்பே முன்கூட்டியே திட்டமிட்டு, கூடுதல் அரசுப் பேருந்துகளை இயக்கி, இந்தக் கட்டணக் கொள்ளையைத் தடுத்து நிறுத்தாத தவெக அரசின் இந்த நிர்வாகக் கையாலாகாத்தனத்திற்குப் பின்னணியில் இருக்கும் 'கமிஷன் டீலிங்' என்ன?



பல்வேறு ஊர்களுக்கான பஸ் கட்டண விவரம்

சென்னையில் இருந்து...	அரசு பஸ் குறைந்தபட்சம்	ஆம்னி பஸ்		
		இன்று அதிகபட்சம்	வழக்கமான நாட்களில்...	விழா கால குறைந்தபட்ச கட்டணம்
	கட்டணம் (ரூபாயில்)			
நாகர்கோவில்	579	3,759	600	2,210
நெல்லை	514	3,759	550	1,960
தூத்துக்குடி	491	3,618	550	1,910
மதுரை	383	3,999	500	1,690
திருச்சி	269	3,999	450	1,320
கோவை	417	3,860	500	1,720
சேலம்	274	3,999	400	1,360
ஈரோடு	329	3,999	500	1,430

கோவையின் அடையாளம் 'பெரியார் அறிவுலகம்!'

திராவிடர் கழகம் சார்பில் இனிப்பு வழங்கிக் கொண்டாட்டம்!

கோவை, அக். 22 -

கோவை காந்திபுரம் பகுதியில் 'பெரியார் அறிவுலகம்' தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜய் அவர்களால் கடந்த 16.10.2026 இல் திறந்து வைக்கப்பட்டது.

பெரியார் அறிவுலகம் முன் அமைந்துள்ள தந்தை பெரியார் சிலை அருகில் 18.10.2026 அன்று காலை 11 மணி அளவில் கோவை மாவட்ட திராவிடர் கழகத்தின் சார்பில் மாவட்டத் தலைவர் ம. சந்திரசேகர் தலைமையில் கழகத் தோழர்கள் அணி திரண்டு கொள்கைக் குடும்பங்கள் மகிழ்ச்சியோடு பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி நடந்த கொண்டாட்டம் தொடர்ந்து, 'பெரியார் கேட்கும் கேள்விகள்' புத்தகம் வழங்கி மகிழ்ந்தனர்.

பெரியார் அறிவுலகம் சிறப்பு!

கோவையில் மிகச் சிறப்பாக அமைந்துள்ள பெரியார் அறிவுலகம் மேனாள் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான 'திராவிட மாடல்' ஆட்சியில் நேர்த்தியாக திட்டமிடப்பட்டு, 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2 லட்சம் சதுர அடி பரப்பளவில் 15 மாதங்களில் கட்டி முடிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இந்தியாவிலேயே "முதல் நூலகம் - அறிவியல் மய்யம்.." ஒருங்கே அமையப்பெற்றுள்ளது இந்த பெரியார் அறிவுலகம் ஆகும். இதில் எட்டுத் தளங்கள் அமைந்துள்ளன.

இதில் ஆங்கிலம், தமிழ் நூலகங்கள், இன்கு பேஷன் சென்டர், டிஜிட்டல் லைப்ரரி மற்றும் கோளரங்கம் என பல்வேறு அம்சங்கள் இடம் பெற்றுள்ளன.

பெரியார் அறிவுலகத்திற்கு ஒரு குழந்தை உள்ளே வந்தால், அடிப்படை அறிவியல், வரலாறு, உயிரியல் உள்ளிட அனைத்தையும் அறிந்து கொள்ளும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது

ஒரு ராக்கெட்டில் அமர்ந்து செல்லும் பொழுது எந்த உணர்வு வருமோ அது போலவும் வடிவமைக்கப்பட்டு இருக்கிறது.



ஒரு சிறுமிக்கு ஸ்பேஸ் ட்ராவல் என்ன என்பதை உடனே புரியும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. (துபாய் மியூசியத்தில் உள்ள அந்த மாடல் இங்கே உருவாக்கப்பட்டுள்ளது).

கட்டட வடிவமைப்பு!

பெரியார் சிந்தனைகளை மக்களிடம் எடுத்துச் செல்லும் வகையில் அமைந்துள்ள, இவ்வளவு சிறப்பாக பிரமாண்டமாக உருவாகியுள்ள பெரியார் அறிவுலகக் கட்டடத்தை வடிவமைத்தவர் கட்டடக்கலை நிபுணர் பொன்னி அவர்கள் என்பது குறிப் பிடத்தக்கது.

கோவையில் அமைந்துள்ள பெரியார் அறிவுலகம் இளையதலைமுறையினர் முன்னேற்றத்திற்கு மேலும் ஒரு வாய்ப்பாக அமைந்துள்ளது.

இளைய தலைமுறையினர் இதைப் பயன்படுத்திக் கொண்டு வாழ்க்கையில் முன்னேற வேண்டும்.

அனைவருக்கும் அனைத்தும்!

அனைத்து அறிவியல் சிந்தனைகளும், மக்களுக்கும் மகிழ்ச்சியைக் கொடுக்கட்டும்; அறிவார்ந்த மக்கள் பெருகட்டும்; அனைவருக்கும் அனைத்தும் கிடைக்கட்டும்; அனைத்து மக்களுக்கும் மகிழ்ச்சியை கொடுக்கட்டும் என அந்த மகிழ்ச்சியைக் கொண்டாடும் வகையில், கழகத் தோழர்கள் இனிப்பு வழங்கிக் கொண்டாடியது குறிப்பிடத்தக்கது

'திராவிட மாடல்' ஆட்சி நாயகன் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி!

முன்னதாக, 'திராவிட மாடல் நாயகர் மானமிகு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் வாழ்க!' 'முத்தமிழ் அறிஞர் கலைஞர் வாழ்க!' 'தந்தை பெரியார் வாழ்க!', 'தமிழர் தலைவர் ஆசிரியர் வாழ்க!' என வாழ்த்து ஒலி முழக்கங்களை மகிழ்ச்சியோடு கழகத் தோழர்கள் முழங்கி, நன்றி தெரிவித்தனர்

நிகழ்வில் பங்கேற்றோர்!

கோவை மாவட்டச் செயலாளர் ஆ.பிரபாகரன், திருநெல்வேலி மாவட்டத் தலைவர் ச. இராசேந்திரன், மேட்டுப் பாளையம் மாவட்டத் தலைவர் சு வேலுச்சாமி, மாவட்டச் செயலாளர் கா.சு ரங்கசாமி, திருப்பூர் மாவட்டச் செயலாளர் ப.குமரவேல், பொள்ளாச்சி மாவட்டத் தலைவர் சி.மாரிமுத்து, பேராசிரியர் முனைவர் தவமணி, ப.க. மாநில அமைப்பாளர் தரும.வீரமணி, மாவட்ட துணைத் தலைவர் பழ.அன்பரசு, மாநகர செயலாளர் புலியகுளம் க.வீரமணி, குனியமுத்தூர் நகர செயலாளர் வே. தமிழ்முரசு, பொதுக்குழு உறுப்பினர் இல.கிருஷ்ண மூர்த்தி, மாவட்டத் தொழிலாளர் அணி செயலாளர் ஆர்.வெங்கடாசலம், மாவட்ட இளைஞரணி செயலாளர் சா. ராஜா, மாவட்ட மாணவர் கழகத் தலைவர் த.க. கவுதமன், ச.திலகமணி, தி.ச யாழினி, த.கவிதா, வ.ராஜேஸ்வரி, கழகச் சொற்பொழிவாளர் இரா.அன்புமதி, அ.மு. ராஜா, கி.திராவிட எழில், வெ.சாவித்திரி, வீ.சகாயமேரி, வடவள்ளி பகுதிக கழகத் தலைவர் ஆட்டோ சக்தி, பீளமேடு பகுதி தலைவர் பு.முருகானந்தம், கணபதி, பகுதி கழகச் செயலாளர் திரா விட மணி, ப.க. ஆடிட்டர் ஆனந்தராஜ், பழனியப்பன், முத்து கணேசன், வேலாண்டிபாளையம் பிரபு, மே.ப.ரங்கசாமி, வெ.பிரபாகரன், லூக்காஸ் பீட்டர், மேட்டுப் பாளையம் தமிழ்மணி, அ.அறிவுமணி, இரா. வெற்றிச்செல்வன், கு.திலீபன், பொள்ளாச்சி பிரவின், பொள்ளாச்சி நகரச் செயலாளர் நாகராஜ், காளவாய் ஜெயக்குமார், அமான், பெயிண்டர் குமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

காரைக்குடியில் பணத்திற்காக

நோயாளியை சிறை வைத்த எம்.எல்.ஏ. சகோதரரின் தனியார் மருத்துவமனை!

அமைச்சர் தொகுதியில் தொடரும் அவலநிலை!

சிவகங்கை, அக். 22 -

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி நகரைச் சேர்ந்தவர் திருமதி வேலம்மாள். இவர் உடல் நலக் குறைவினால் காரைக்குடி அம்பேத்கர் சிலை அருகில் உள்ள தனியார் மருத்துவ மனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். சிகிச்சைக்காக முதலில் முன் பணமாக வேலம்மாளின் தங்க நகைகள் அடகு வைக்கப்பட்டு ரூபாய் 5,500 செலுத்தி உள்ளார்.

சிகிச்சை முடிந்த நிலையில் மேலும் ரூபாய் 16 ஆயிரத்து 1100 ரூபாய் செலுத்த வேண்டும் என்று மருத்துவமனை நிர்வாகம் வேலம்மாளிடம் தெரிவித்தார்கள். அதற்கு உறவினர்கள் சார்பில் மேலும் 10 ஆயிரம் ரூபாய் செலுத்தினார்கள்.

தற்போது பணம் இல்லை என்றும், வீட்டிற்குச் சென்று விட்டு விரைவில் வந்து மீதிப் பணத்தை செலுத்துவதாகவும் வேலம்மாளை டிஸ்சார்ஜ் செய்யுமாறு கூறினார்கள். அதற்கு மருத்துவமனை நிர்வாகம் மறுத்து அங்குள்ள ஒரு அறையில் நோயாளி வேலம்மாளை பூட்டி வைத்தார்கள்.

இது பற்றி உறவினர்கள் மருத்துவமனை நிர்வாகத்திடம் முறையிட்டும் அவர்கள் அதை காதில் வாங்கிக் கொள்ளவில்லை. இதை கேள்விப்பட்ட காரைக்குடி செய்தியாளர் ஒருவர் மருத்துவ மனை நிர்வாகத்துடன் நேரில் சென்று பேசினார்.

அவர் ரூபாய் 1000 செலுத்திவிட்டு மீதி பணம் அவர்கள் வீட்டிற்கு சென்று விட்டு விரைவில் வந்துமீதிப்பணத்தை கட்டுவார்கள் என்றும் அதற்கு தான் பொறுப்பு என்று கூறி உள்ளார். அதை மருத்துவமனை நிர்வாகம் கண்டு கொள்ள வில்லை. மீதி பணம் செலுத்தினால் வேலம்மாளை டிஸ்சார்ஜ் செய்வதாக உறுதியாக கூறினார்கள்.

செய்தியாளர் இது குறித்து காரைக்குடி சட்ட மன்ற உறுப்பினர் அமைச்சர் டி.கே.பிரபு விற்கு செய்தியாளர் போனில் தொடர்பு கொண்டு வேலம்மாள் குறித்த விபரங்களை தெரிவித்தார். அமைச்சர் மருத்துவமனை நிர்வாகத்திடம் இது குறித்து பேச விரும்பினார்.

ஆனால் மருத்துவமனை நிர்வாகம் அமைச்சருடன் பேச விரும்பவில்லை என்று கூறி தொலை பேசியை வாங்க மறுத்து விட்டனர். வேலம்மாளின் சிகிச்சைக்காக உள்ள மீதிப் பணத்தை செலுத்தவேண்டும் என்று கண்டிப்பாக கூறினார்கள். இதன் பிறகு அமைச்சர் ஜி.பே முலம் மருத்துவமனைக்கு ரூபாய் 6000செலுத்தினார். அதன் பிறகு வேலம்மாளை மருத்துவமனையிலிருந்து டிஸ்சார்ஜ் செய்துள்ளார்கள்.

இந்த மருத்துவமனை திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதி த.வெ.க. உறுப்பினர் சகோதரரின் மருத்துவமனை என்பது குறிப்பிடத்தக்கதாகும். தொடர்ந்து காரைக்குடியில் இரண்டு மாதங்களுக்கு முன் தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட ஒருவர் உயிரிழந்தது தொடர்பாக போராட்டங்கள் பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டது.

காரைக்குடியில்உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அதிக பணம் கேட்டு நோயாளிகள் மிரட்டப்படுவது இது போன்ற செயல்கள் அதிகரித்து வருவதாகவும் சிகிச்சை பெற வந்தவர்கள் புகார் கூறியுள்ளார்கள்.

மாவட்ட நிர்வாகம், மாவட்ட சுகாதார துறையும் இதுகுறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள். அமைச்சரின் தொகுதியிலேயே இத்தகைய அவலநிலை தொடர் கதையாக இருக்கிறது. என்று சிகிச்சைக்கு வந்தவர்கள் புலம்பினார்கள்.

நாம் தமிழர் கட்சியின் இடைத்தேர்தல் வேட்பாளர் கார்த்திகா கைது!

அரசியல் பழிவாங்கும் நடவடிக்கைக்கு கண்டனம்!

மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ. அறிக்கை!

நாகை, அக். 22 -

மனித நேய மக்கள் கட்சித் தலைவர் பேராசிரியர் எம். எச். ஜவாஹிருல்லா விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தாராபுரம் சட்டமன்றத் நாம் தமிழர் கட்சியின் இடைத்தேர்தல் வேட்பாளர் கார்த்திகா கைது: அரசியல் பழிவாங்கும் நடவடிக்கைக்கு கண்டனம்.

மனிதநேய மக்கள் கட்சியின் தலைவரும் நாகப்பட்டினம் சட்டமன்ற உறுப்பினருமான பேராசிரியர் எம். எச். ஜவாஹிருல்லா வெளியிடும் அறிக்கை

தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் நாம் தமிழர் கட்சியின் வேட்பாளராகப் போட்டியிட்ட கார்த்திகாவையும்



அவரது கணவரையும் காவல்துறையினர் கைது செய்திருப்பது அதிர்ச்சியளிக்கிறது. இந்தக் கைது நடவடிக்கையின் பின்னணி மற்றும் அதில் பின்பற்றப்பட்ட நடைமுறைகள் அனைத்தும் கடும் கண்டனத்திற்குரியவை.

ஜனநாயகத்தில் அரசியல் கட்சிகள் தேர்தலில் போட்டியிடுவதற்கும், தங்களது கருத்துகளை மக்களிடம் எடுத்துரைப்பதற்கும், ஆளுங்கட்சியின் செயல்பாடுகளை விமர்சிப்ப தற்கும் முழு உரிமை உண்டு. அரசியல் கருத்து வேறுபாடுகள் காரணமாக எவரும் பழிவாங்கப்படக் கூடாது. சட்டம் அனைவருக்கும் சமமாகச் செயல்படுத்தப்பட வேண்டும் என்பதே ஜனநாயகத்தின் அடிப்படை நெறியாகும்.

தாராபுரம் இடைத்தேர்தலின் போது கடந்த அக்டோபர் 2ஆம் தேதி தாராபுரத்தில் நாம் தமிழர் கட்சியின் தேர்தல் பணிமனைக்கு அருகில் வைக்கப்பட்டிருந்த விளம்பர பலகை அகற்றப்பட்டதைக் கண்டித்து, அக்கட்சியினர் காவல் நிலையம் முன்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனைத் தொடர்ந்து, தேர்தல் காலத்தில் வாக்காளர்களுக்குப் பணம் மற்றும் பரிசுப் பொருட்கள் வழங்கப்படுவதாகக் குற்றம்சாட்டிய வேட்பாளர் கார்த்திகா, தேர்தல் அலுவலரிடம் புகார் அளித்தார்.

வாக்காளர்களுக்கு பணம் கொடுத்த புகார் மீது நடவடிக்கை எடுக்காத காவல்துறை தேர்தல் பரப்புரை தொடர்பான வழக்கில் தற்போது கைது செய்திருப்பது பழிவாங்கலின் வெளிப்பாடாகவே அமைந்துள்ளது.

ஒருவர் மீது குற்றச்சாட்டு இருந்தால், உரிய விசாரணை நடத்தி, சட்டத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுப்பதில் மாற்றுக் கருத்தில்லை. ஆனால், கைது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் போது சட்டப்பூர்வ நடைமுறைகள் முழுமையாகப் பின்பற்றப்பட வேண்டும். குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படுவதற்கு முன்பே எவரும் குற்றவாளியாகச் சித்தரிக்கப்படக் கூடாது.

எனவே, கார்த்திகா மற்றும் அவரது கணவர் மீதான வழக்குகளின் விவரங்களைத் தமிழக அரசு வெளிப்படையாகத் தெரிவிக்க வேண்டும். முறையற்ற வகையில் கைதுச் செய்யப்பட்டுள்ள சகோதரி கார்த்திகாவும் அவரது கணவரும் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசியல் எதிர்ப்புக் குரல்களை ஒடுக்குவது ஜனநாயகத்தின் வலிமையல்ல; அது ஜனநாயகத்தின் மாண்பைக் குலைக்கும் செயல். சட்டத்தின் ஆட்சி நிலைநாட்டப்பட வேண்டும்; அரசியல் பழிவாங்கலுக்கு இடமளிக்கக் கூடாது!

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

சேலத்தில் த.வெ.க. ஆட்சியில் வீதிக்கு வீதி போதை மாத்திரை விற்பனை!

சேலம், அக். 22 -

சேலம் மாவட்டத்தில் அரசால் தடை செய்யப்பட்ட போதை மாத்திரைகள் வீதிக்கு வீதி விற்பனை சமீப காலமாக த.வெ.க. ஆட்சியில் அதிகரித்து வருகிறது.


இந்த நிலையில் கன்னங் குறிச்சி போலீசார் எழில் நகர் பகுதியில் சென்ற போது சந்தேகத்திற்கு இடமாக நின்று கொண்டிருந்த வாலிபரை சோதனை செய்ததில் அவரிடம் மாத்திரைகள் இருந்ததை கண்டு பிடித்ததனர்.

அந்த மாத்திரைகளை சோதனை செய்ததில் இதை போதைக்காக பயன்படுத்தும் மாத்திரைகள் என்று தெரிய வந்தது இவரிடம் 60 போதை மாத்திரைகள் இருந்ததை பறிமுதல் செய்தனர். இந்த போதை மாத்திரைகளை வைத்திருந்த கிச்சிப் பாளையம் பகுதியைச் சேர்ந்த அருணாசலத்தை கைது செய்து அவரிடம் இவருக்கு போதை மாத்திரையை விற்பனைக்கு கொடுத்தவர் யார்? என்று விசாரணை செய்து வருகிறார்கள்.

சந்தி சிரிக்கும் சட்டம் – ஓழுங்கு!

செயலற்ற விஜய் ஆட்சியில் கொலை, கொள்ளைகள்!

(19.10.2026)



1. கோவை மாவட்டம் சரவணம்பட்டியில் குடி போதையில் ஏற்பட்ட தகராறில் ஹோட்டல் ஊழியர் அடித்துக் கொலை ...

2. கடலூர் மாவட்டம் பெரிய வடவாடி கிராமத்தில் முன்விரோதம் காரணமாக விறகு வெட்டும் கோடாரியால் விவசாயி வெட்டி கொலை ...

3. ஈரோடு அரசு மருத்துவமனை வளாகத்தில் பட்டப் பகலில் பரபரப்பு, முன்விரோதம் காரணமாக மாமனாரை சரமாரியாக கத்தியால் குத்திய மருமகன்.....

4. விழுப்புரம் அருகே சிந்தாமணி வீட்டிற்கு வெளியே விளையாடிக் கொண்டிருந்த ஆறு வயது பெண் குழந்தையை வாயைப் பொத்தி கடத்திச் செல்ல முயன்ற வட மாநில வாலிபர் சிக்கினார்...

5. விழுப்புரம் மாவட்டம், செஞ்சி அருகே காணாமல் போன 11 வயது சிறுமி 8 நாட்களுக்கு மேலாகியும் இதுவரை கிடைக்காததால் பதட்டம் ...

6. திருப்பெரும்புதூர் அருகே தனது பாட்டி வீட்டில் வசித்து வந்த எட்டு வயது சிறுமி மாயம், ஏற்கனவே செஞ்சி அருகே 11 வயது சிறுமி மாயமான நிலையில் மற்றுமொரு சம்பவம் .....

7. உதகை அருகே கொதுமுடி கிராமத்தில் கடந்த 15 நாட்களாகச் சுற்றித்திரிந்த



கரடியைக் கூண்டு வைத்து வனத்துறையினர் பிடித்தபோது, தாங்கள்தான் பிடித்ததுபோல் ரீல்ஸ் வீடியோ எடுத்த த.வெ.கவினர்.....

8. நாகையில் போதை பொருள் குறித்து செய்தி வெளியிட்ட தனியார் தொலைக்காட்சி நிருபருக்கு கொலை மிரட்டல் விடுத்த தவெக நகர செயலாளர் சிக்கினார்....

9. திருப்பூர் கிழக்கு மாவட்ட தவெக முக்கிய நிர்வாகி இணையவழி பரிமாற்றம் மூலம் ரூபாய் 200 கோடி மோசடி த.வெ.க. நிர்வாகி உட்பட, மூன்று போலீசில் சிக்கினர் ...

10. திருவள்ளூர் மாவட்டத்தில் அரசு பேருந்து ஓட்டுநர் மீது தாக்குதல் நடத்திய ஆட்டோ ஓட்டுனர், பேருந்துகளை சாலையில் நிறுத்தி பேருந்து டிரைவர்கள் போராட்டம்....

11. நாகை அருகே 135 கிலோ மெத்தபெட்டமைன் பறிமுதல் செய்யப்பட்ட வழக்கில் சிந்தாமணி பிரதான சாலைப்பகுதியைச் சேர்ந்த தவெக நிர்வாகி பூபாலன் உள்ளிட்ட 4 பேருக்கு 15 நாள் நீதிமன்ற காவல். கைதான தவெக நிர்வாகி உள்ளிட்ட 4 பேரும் 15 நாள் நீதிமன்ற காவலில் நாகப்பட்டினம் சிறைச்சாலையில் அடைப்பு.



12. ஈரோடு மாவட்டம் பல்லகவுண்டம்பாளையத்தில் கடந்த 14ம் தேதி காணாமல் போன செவிலியர் உத்திரா சடலமாக மீட்பு